# ஸ்வர்ணவல்லி சமேத
# முக்தீஸ்வரர் ஆலயம்
# தில தர்பண பூமி

சாந்திப்பிரியா



முன் ஒரு காலத்தில் தமிழ்நாட்டின் கூத்தனூர் பகுதியில் ஹரி-சிவா என்ற ஆறு ஒன்று இருந்தது. சரஸ்வதி ஆலயத்துக்கு பெயர் போன இடம் கூத்தனூர் ஆகும்.

தக்ஷப்ரஜாபதி நடத்திய யாகத்தில் சிவபெருமானுக்கு ஏற்பட்ட அவமானத்தை தாங்கிக் கொள்ள முடியாமல் பார்வதி தீயில் விழுந்து தற்கொலை செய்து கொண்டது அனைவருக்கும் தெரியும். பார்வதி தேவி தெய்வமே ஆனாலும் அவள் மனித உருவில் யாகத்துக்கு வந்திருந்தபோது இறந்தாள் என்றாலும் அவளுக்கு மரணம் அடைந்த மனிதர்களுக்கு செய்யப்படும் இறுதி காரியங்களையும் தர்ப்பணம் போன்றவற்றையும் எவரும் செய்யவில்லை. ஆனால் பார்வதி தேவி தற்கொலை செய்து மடிந்ததும், இறந்தவர்களை மனிதர்கள் தோளிலே சுமந்து கொண்டு செல்வது போல அவளது உயிரற்ற சடலத்தை தனது தோளிலே எடுத்துக் கொண்டு உலகெங்கும் சிவபெருமான் சுற்றி வந்தபோது அவர் கோபத்தைத் தணிக்க விஷ்ணு பகவான் பார்வதியின் சடலத்தை வெட்டி எறிய அந்த உடலின் பல பாகங்களும் பூமியில் பல இடங்களிலும் விழுந்தன. மனித பிறவி முடிந்ததும் தமது அவதாரத்தை முடித்துக் கொள்ளும் தெய்வங்களின் உடல்கள் அப்படியே மறைந்து விடும், அல்லது மண்ணோடு மண்ணாக பூமியில் புதைந்து அதே போன்ற உருவுடனான கல்லாகிவிடும். அவை பல நூற்றாண்டுகளுக்கு பிறகு எவர் மூலமாவது தோண்டி எடுக்கப்பட்டு ஸ்தாபிக்கப்படும். அதே நேரத்தில் மனித உருவில் இருந்து விடுபட்டு தெய்வ உருவை எடுக்க மீண்டும் சென்று விடும் தெய்வங்கள் அதற்கு முன்னால் தமது தெய்வீக ஆத்மாவை தூய்மை செய்து கொள்ள வேண்டி இருக்கும். ஏன் எனில் தேவலோகத்தில் உள்ள தெய்வங்களுக்கும், பூமியிலே வாழும் மனிதப் பிறவிகளுக்கும் நிறையவே வேறுபாடு உள்ளது. மனித உடலில் இருந்து வெளியேறும் தெய்வீக ஆத்மாக்கள் அந்த உடலின் மீது மீண்டும் பற்று கொள்ளக் கூடாது என்பதினால் தமது ஆத்மாக்களை முதலில் தெய்வீக ஆத்மாவாக முற்றிலும் மாற்றிக் கொள்ள சில நியமங்களை செய்து கொள்ள வேண்டும் என்பது பரமாத்மன் வைத்துள்ள நியதி ஆகும். பார்வதியின் மனித உடலில் இருந்து அவளது தெய்வீக ஆத்மா வெளியேறியதும், அதை தூய்மைப்படுத்திக் கொண்டு மீண்டும் தன்னுள் எடுத்துக் கொள்ள பார்வதி சில நியமங்களை செய்ய வேண்டி இருந்தது.

தனக்கு நேரிட்ட அவமானங்களை சந்தித்தப் பிறகு நடைபெற்ற பல்வேறு நிகழ்சிகளுக்குப் பிறகு ஆத்மார்த்தமான மன அமைதி கிடைக்க ஹரி-சிவா ஆறு அருகில் அடர்ந்த காட்டுப் பகுதியாக இருந்த தில தர்ப்பண பூமிப் பகுதிக்கு வந்து தங்கிய சிவபெருமான் ஆழ்ந்த தவத்தில் அமர்ந்தார் (அப்போது அந்தப் பகுதி தில தர்ப்பண பூமி என்ற பெயரை அடைந்திருக்கவில்லை. ஹரி-சிவா ஆறும் கிடையாது). அதே நேரத்தில்தான் பார்வதி தேவியும் தன்னுடைய ஆன்மாவை தூய்மைப்படுத்திக் கொள்ள அதே இடத்துக்கு வந்திருந்தாள். ஆனால் ஒருவருக்கொருவர் மற்றவர் அங்கு உள்ளதை அறிந்திடவில்லை. சிவபெருமான் தவத்தில் அமர்ந்திருந்தபோது அவருக்கு எந்த விதத்திலும் தான் இடைஞ்சலாக இருக்கக் கூடாது என்றும், ஹிமய மலையில் அவர் வாழ்ந்திருந்த அதே போன்ற குளுமையான சூழ்நிலையை அவர் தவத்தில் அமர்ந்துள்ளபோது அவருக்கு அமைத்துக் கொடுக்க வேண்டும் என்றும் எண்ணிய கங்கா தேவி சிவபெருமானின் தலை முடியில் இருந்து இறங்கி வந்து அவர் கால்களை வருடியபடி சிறு நதியாக ஓடினாள். இப்படியாக அங்கு பிறந்ததே ஹரி-சிவா ஆறு ஆகும். ஆனால் சிவபெருமானின் தவம் முடிந்ததும், அவர் தலை முடியில் இருந்து மீண்டும் கங்கை நதி பாயத் துவங்க அதன் கிளை நதிகளான ஹரி-சிவா இரண்டும் அதே இடத்தில் பூமியின் அடியில் புகுந்து சென்று தம்மை மறைத்துக் கொண்டு விட்டன. அதனால்தான் தில தர்ப்பண பூமிக்கு வந்து மறைந்த முன்னோர்களுக்கு சிரார்த்த காரியம் செய்தால், காசிக்கு சென்று செய்யப்படும் சிரார்ததுக்கு என்ன பலன் கிடைக்குமோ அதே அளவிலான பலன் இங்கு செய்தாலும் கிடைக்கும் என்பது ஐதீகம் ஆயிற்று. இந்த உலகில் தர்ப்பணம் செய்து ஆத்மாக்களை திருப்திபடுத்த மஹா தர்ப்பண ஷேத்திரம் எனப்படும் ஏழு புனித தலங்கள் உள்ளன. அவை காசி, ராமேஸ்வரம், ஸ்ரீ வாஞ்சியம், திருவெண்காடு, தில தர்ப்பண பூமி, கயா மற்றும் அலஹாபாத் போன்றவை ஆகும்.

தீயில் குதித்து தற்கொலை செய்து கொண்ட பிறகு அந்த உடலைத் துறந்து விட்டு வெளிவந்த பார்வதிக்கு அதிக அளவிலான மன உளைச்சலும், பல்வேறு பிரச்சனைகளும் தோன்றின. மனித உருவில் இருந்து மரணம் அடைந்தப் பின்

வெளியேறி வந்துள்ள தன்னுடைய ஆத்மாவை எப்படி தூய்மைபடுத்திக் கொண்டு சிவபெருமானின் மனைவியாக மீண்டும் சேர்ந்து கொள்வது என்பதே அவளுடைய மூலப் பிரச்சனையாக இருந்தது. அதன் காரணம் தீயில் குதித்து தற்கொலை செய்து கொண்டு விட்டப் பின், மனித உடலை துறந்து சென்ற மற்ற தெய்வீக அவதாரங்கள் மறைந்து விட்டதைப் போல அவள் உடல் மறைந்து போகவில்லை. மாறாக அதற்குப் பிறகு ஏற்பட்ட சில நிகழ்ச்சிகளினால் பல இடங்களிலும் அவளது உடலின் பாகங்கள் விழுந்திருந்தன. பல்வேறு கோணங்களிலும் அனைத்தையும் ஆராய்ந்து பார்த்தவள் அந்த உடலில் இருந்து வெளிவந்து தன் உடலில் புகுந்து கொண்டிருந்த தனது ஆத்மாவை தூய்மைப்படுத்திக் கொள்ள தனக்குத் தானே தர்ப்பணம் செய்து கொள்ள முடிவு செய்தாள்.

இங்கு முக்கியமான இரண்டு விஷயங்களைக் குறிப்பிட வேண்டும். முதலாவதாக எந்த ஒரு புராணக் கதைகளிலும் பார்வதி மேற்கொண்ட தற்கொலையைப் போல வேறு எந்த தெய்வமும் தற்கொலை செய்து கொண்டுள்ளதாகவோ, பூமியிலே இறந்து போன மனித சடலங்களை தோளில் தூக்கிக் கொண்டு சென்றது போல பல்வேறு நிலைகளிலும் மறைந்து போன அவதார தெய்வங்களின் சடலங்களை எவருமே தூக்கிக் கொண்டு சென்றதாக எந்த சம்பவங்களும் கூறப்படவில்லை. ஆனால் சிவபெருமான் தனது இறந்துபோன மனைவியின் சடலத்தை தோளிலே சுமந்து கொண்டு ஆவேசத்துடன் உலகை சுற்றி வரத் துவங்கியபோது, அவர் கோபத்தை தணிக்க பகவான் விஷ்ணு பார்வதியின் இறந்து போன உடலை துண்டு துண்டாக வெட்டி கீழே விழ வைத்தார் என்ற கதை மட்டுமே காணப்படுகிறது. ஆகவே புராணக் கதையில் காணப்படும் இப்படிப்பட்ட மகத்துவமான கதை ஒரு வினோதமான தெய்வீக நிகழ்ச்சியாகும். இதைப் போல வேறு தெய்வங்களுக்கு நிகழ்ந்துள்ளதா என்றால் இல்லை என்றே கூற முடியும்.

ராமாயணத்தில் கூட சீதாபிராட்டி அவர் கணவர் ராமரின் கட்டளைப்படித்தான் தனது கற்பை வெளிப்படுத்த தீயில் குதித்தார். ஆனால் அவரது உடல் வெந்து

போகவில்லை. மாறாக பூமித்தாய் பூமியைப் பிளந்து சீதையை தன்னுள் இழுத்துக் கொண்டு விட சீதையின் உடல் அப்படியே மறைந்து போயிற்று.

வேடனின் அம்பு தாக்கி இறந்துபோன கிருஷ்ணரின் உடலும் அவர் மரணம் அடைந்ததும் அப்படியே மறைந்து விட்டது. பரசுராமர், ராமர் மற்றும் லஷ்மணர் போன்ற தெய்வங்களும் அப்படியே நதியில் சென்று மறைந்தார்கள். பரசுராமரின் தாயாரான ரேணுகா தேவியும் அப்படியே மறைந்து போனாள். சிவபெருமானின் மனித அவதாரமான ஆதி சங்கரரும் இமய மலையிலே அப்படியே மறைந்து போனார். அவர்கள் அனைவருடைய உடலும் என்ன ஆயிற்று என்ற குறிப்புக்கள் எதுவுமே கிடையாது. அவர்கள் அனைவரும் அப்படியே தமது முந்தைய தெய்வ உருவங்களை அடைந்தார்கள். ஆனால் அவை அனைத்துக்கும் மாறாக பார்வதியின் உடலை சிவபெருமான் தோளிலே தூக்கிக் கொண்டு இறந்த மனிதர்களை தோளிலே சுமந்துகொண்டு செல்வதைப் போல சென்றதினாலும், அவள் உடலின் பாகங்கள் பல இடங்களில் விழுந்ததினாலும் அந்த தெய்வீக சடலத்துக்கான கர்மாக்களை செய்ய வேண்டிய கட்டாயம் பார்வதிக்கு ஏற்பட்டது. அதனால்தான் அவள் தர்ப்பணம் செய்து அந்த சடலத்தில் இருந்து வெளியேறிய தன்னுடைய ஆத்மாவை தூய்மைப்படுத்திக் கொள்ள வேண்டி இருந்தது.

இரண்டாவதாக பார்வதி செய்து கொண்ட தர்ப்பணம் குறித்த செய்தியாகும். பூமியிலே உள்ளவர்கள் எப்படி தர்ப்பணம் செய்வார்கள்? எள்ளும் தண்ணீரும் கலந்து மந்திரங்களை ஓதி மறைந்து போன முன்னோர்கள் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்தனை செய்து கொண்டு நீர் நிலையில் அல்லது பூமியில் எள் கலந்த தண்ணீரை விடுவார்கள். எள் என்பது தெய்வீக சக்தி கொண்ட விதை என்பதினால் மந்திரங்களைக் கொண்ட எள் தன்னுள் ஆத்மாக்களை இழுத்துக் கொண்டு உடலில் இருந்து வெளியேறி சுற்றித் திரியும் ஆத்மாக்களின் பசி தாகங்களை தீர்க்கும் என்பது நம்பிக்கை. ஆகவேதான் எள் என்பது எந்த ஒரு தர்ப்பணத்திலும் முக்கிய பங்கு வகிக்கின்றது. பார்வதி செய்து கொண்ட தர்ப்பணம் என்பது அவள் மரணம் அடைந்ததும் அவள் உடலில் இருந்து

வெளியேறிய ஆத்மாவை தூய்மைப்படுத்திக் கொண்டு, மரணம் அடைந்த அவளது உடலில் இருந்து வெளியேறிய தெய்வீக சக்தியை மீண்டும் தனது ஆத்மாவுக்குள் கிரகித்துக் கொள்ளும் நிலையாகும். அதை பார்வதி தேவி எப்படி செய்தாள்?

கங்கையின் துணை ஆறுகளான ஹரி-சிவா ஆற்றில் குளித்தப் பின் அதன் கரையில் தண்ணீர் ஊற்றி ஈரமாக்கிய பூமியில் ஒரு பாயைப் போல எள்ளை தூவி வைத்து அதன் மீது அமர்ந்து கொண்டு தனது ஆத்மாவிற்கு மட்டுமே உரியதான சில குறிப்பிட்ட மந்திரங்களை ஓதி தனது இறந்து போன உடலில் இருந்து வெளியேறி தனது ஆத்மாவோடு அகண்டத்தில் சுற்றித் திரிந்து கொண்டிருந்த தமது தனித்தன்மை கொண்ட தெய்வீக சக்திகளை தன் ஆத்மாவுக்குள் மீண்டும் இழுத்துக் கொண்ட நிலையாகும். இதற்காக ஈரப்பதமான பூமியில் எள்ளைத் தூவி அதன் மீது அமர்ந்து கொண்டு செய்ததினால் அது தெய்வீக தர்ப்பணம் என்று கருதப்பட்டது. ஏன் எனில் முன்னர் கூறியது போல எள் என்பது தெய்வீக விதைகளாகும்.

அதை போல ராமரும் லஷ்மணரும் தில தர்பண பூமிக்கு வந்து தமது தந்தைக்கு தர்ப்பணம் செய்தார்களாம். இலங்கையில் நடைபெற்ற யுத்தத்திற்குப் பிறகு அயோத்திக்கு செல்லும் வழியில் இருந்த ராமேஸ்வரத்தில் தர்ப்பணம் செய்வது விசேஷம் என்பதினால் ராமரும் லஷ்மணரும் ராமேஸ்வரத்தில் அவர்களது தந்தை தசரதருக்கு தர்ப்பணம் செய்தார்கள். ராமரும் லஷ்மணரும் தில தர்பண பூமிக்கு வரும் முன்னால் அவர்களுக்கு வசிஷ்ட முனிவர் அந்த பூமியின் மகத்துவத்தைக் கூறியதினால்தான் அவர்கள் அங்கு வந்தார்கள். அதற்கு முன்னரும் அவர்கள் வனவாசத்தில் இருந்தபோது அவர்களது தந்தை தசரதர் மறைந்த செய்தி கேட்டு வனத்திலேயே ஸ்ரார்தம் செய்து தர்ப்பணமும் செய்திருந்தார்கள். ஆனாலும் அவர்களுக்கு ஸ்ரார்தம் செய்த மன நிறைவோ அல்லது மன அமைதியோ கிடைக்கவில்லை. மனதில் எதோ சங்கடம் இருந்து கொண்டே இருந்தது. அதற்குக் காரணம் அவர்கள் வைத்த பிண்டத்தை எந்த இடத்திலும் காகங்கள் உண்ண வரவே இல்லை என்பதேயாகும். ஒருவர் வைத்த

பிண்டங்களை காகம் வந்து உண்ணவில்லை என்றால் அவர்கள் செய்த ஸ்ரார்த்த காரியம் முழுமை அடையவில்லை என்பது சமிக்கை ஆகும். அதனால் தமக்கு ஏற்பட்டிருந்த பிருமஹத்தி தோஷம் விலகவில்லையோ என்ற இனம் தெரியாத தீராத மனக் கலகத்தோடு ராமரும் லஷ்மணரும் இருந்தார்கள். அதனால்தான் அவர்கள் தமது குல முனிவரான வசிஷ்ட முனிவரிடம் ஆலோசனை கேட்டபோது அவரும் நாரத முனிவரும், கங்கை நதியும் தமக்குக் கூறிய சில அதிசயமான செய்தியை அவர்களுக்கு கூறினார்.

அந்த செய்தி என்னவென்றால் தில தர்ப்பண பூமியில் சிவபெருமான் தபத்தில் அமர்ந்து இருந்தபோது ஒருமுறை நாரத முனிவர் அந்த வழியே சென்று கொண்டு இருந்தார். அப்போது அவர் கங்கை நதி கிளை நதியாக அங்கே ஓடிக் கொண்டு இருந்ததைக் கண்டு வியப்பு அடைந்து கீழே வந்து கங்கை நதியுடன் அது குறித்து பேசலானார். அந்த பேச்சின் இடையே கங்கை அவருக்கு தான் தில தர்ப்பண பூமியில் கண்ட ஒரு வினோதமான காட்சியை விவரித்தாள். 'நேரம் காலம் பார்க்காமல் வருடத்தின் அனைத்து நாட்களிலும் பலரும் அங்கு வந்து ஹரிசிவா எனும் பெயரில் ஓடிக்கொண்டு இருந்த தன் ஆற்றில் குளித்தப் பின் ஆற்றுப் படுக்கையில் தர்ப்பணம் செய்து விட்டு பிண்ட உருண்டையை (அரிசியிலான சாத உருண்டை) வைத்து விட்டுச் சென்றதும், அவர்கள் எவருக்காக தர்ப்பணம் செய்தார்களோ அந்த உடலின் ஆத்மாக்கள் கண்களுக்கு புலப்படாத சூக்ஷம உருவில் அங்கு வந்து பிண்டத்தை நேரடியாக* எடுத்துக் கொண்டார்கள். அவை அனைத்தையும் வெகு தொலைவில் இருந்த (இன்றைய கூத்தனூர் சரஸ்வதி ஆலயம் உள்ள இடத்தில் ) ஒரு இடத்தில் கண்களுக்கு புலப்படாத சூக்ஷம உருவில் அமர்ந்து இருந்த பிரும்மா குறிப்பு எடுத்துக் கொண்டபடி இருந்தார். கங்கை தேவிக்கு ஆச்சர்யம் தந்த காட்சி என்னவென்றால் அப்படி பிண்டங்களை நேரடியாக வந்து பெற்றுக் கொண்ட ஆத்மாக்களை சுற்றி எந்த யம தூதரும் காணப்படவில்லை, அந்த ஆத்மாக்கள் பிண்டங்களை எடுத்துக் கொண்டபோது அவர்களை எவரும் தடுக்கவும் முற்படவில்லை. ஆனால் நாரதர் அவளுடன் பேசிக்கொண்டு இருந்த அந்த நேரம்வரை கூட அந்த நிலைக்கான காரணமும் கங்கா தேவிக்கு

தெரியவில்லை' என்றாள். (*ஆத்மாக்களாக அகண்டத்தில் சுற்றித் தெரியும் பித்ருக்கள் நேரடியாக எப்படி பிண்டங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதைக் குறித்த ஒரு விளக்கம் இது: கண்களுக்கு புலப்படாதவகையில் வரும் ஆத்மாக்கள் பூமியிலே வைத்துள்ள உணவை நேரடியாக எடுத்துக் உண்ண முடியாது. அப்படி என்றால் எதற்காக உணவை பிண்டமாக வைக்க வேண்டும்? இறந்தவர்களது பசியும் தாகமும் எப்படி தீரும்? பூமியிலே முறைப்படி ஸ்ரார்தம் மற்றும் தர்ப்பணம் செய்து விட்டு இறந்துபோன பித்ருக்களுக்கு பிண்டம் என்ற பெயரில் வைக்கப்படும் சாத உருண்டைகளின் அளவுக்கு ஏற்றார்போல பல மடங்கு உணவு அந்த பிண்டம் எவருக்காக வைக்கப்பட்டதோ அந்த ஆத்மாக்களின் பசி தீருவதற்காக யம கணங்களினால் யமலோகத்தில் கொடுக்கப்படவேண்டும் என்பது தேவலோக நியதியாகும். அதை யம கணங்களினால் மீற முடியாது. ஆகவே வைக்கப்பட்ட பிண்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டது என்பதை சமிக்கையாக காட்டவே பூமியிலே உள்ள யமராஜரின் வாகனமான காகத்தின் வம்சத்தினரை யம கணங்கள் அந்த பிண்டத்தை உண்ணுமாறு கட்டளை இடுவார்கள். பிண்டத்தை காகம் வந்து உண்டால் அவை பித்ருக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டன என்பதை அறிந்து கொள்ளலாம் என்பது நம்பிக்கை ) .

கங்கா தேவியிடம் இருந்து அந்த செய்திகளைக் கேட்டறிந்து கொண்ட நாரத முனிவருக்கு தில தர்ப்பண பூமிக்கு மட்டும் ஏன் அப்படிப்பட்ட மகத்துவம் உள்ளது என்பதைக் குறித்து அறிந்து கொள்ள வேண்டும் என்ற தனது ஆவலை அடக்கிக் கொள்ள முடியவில்லை. ஆகவே சிவபெருமானின் தவம் எப்போது முடிவுறும், இந்த சந்தேகம் குறித்த விளக்கத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என எண்ணியவர் அங்கேயே தங்கினார். காலம் ஓடியது. சிவபெருமான் தவம் முடிவுற்று கண் முழித்ததும் ஓடிச் சென்று அவர் பாதங்களில் விழுந்து வணங்கி கங்கா தேவி தனக்கு கூறிய செய்தியின் அடிப்படைக் காரணத்தைக் கூறுமாறு வேண்டிக் கொண்டார்.

சிவபெருமானும் தில தர்ப்பண பூமிக்கு ஏன் அப்பபடிப்பட்ட மகத்துவம் உள்ளது என்பதைக் குறித்து கூறினார். 'தான் தவத்தில் இருந்த எந்தப் பகுதியிலும் யமராஜருக்கோ அல்லது அவருடைய கணங்களுக்கோ எந்த காலத்திலும் எந்த அதிகாரமும் கிடையாது என்பது நிர்ணயிக்கப்பட்ட நியதி ஆகும். தான் தவத்தில் இருந்த எந்தப் பகுதியிலும் நுழையும் ஆத்மாவிற்கு அவர்கள் எந்தவிதமான துன்பத்தையும் தரக்கூடாது, அவற்றை தடுக்கவும் கூடாது. அந்த இடத்தில் தனது தவத்தின்போது தமக்கு இமயமலையின் சூழ்நிலைப் போன்ற குளுமையைத் தர வேண்டும் என்பதற்காக கங்கை நதி தன் பாதங்களை வருடியபடி ஹரி-சிவா என்ற பெயரில் துணை நதியாக ஓடிச் சென்றதினால் தில தர்ப்பண பூமி புனிதமான சிவபூமி ஆகி விட்டது. அதற்கு இணையாக உலகில் வேறு எந்த இடமும் கிடையாது. ஆகவே தில தர்ப்பண பூமியில் துணை நதி உருவில் ஹரி-சிவா என்ற பெயரில் ஓடிய கங்கையின் ஆற்றில் குளித்துவிட்டு தர்ப்பணம் செய்தபின் பிண்டம் வைத்தால் அந்த பிண்டம் எவருக்காக வைக்கப்பட்டதோ அந்த ஆத்மாக்கள் அவற்றை பெற்றுக் கொள்ள அங்கு வருவதற்கு யமராஜன் தடங்கல் செய்ய முடியாது. தமக்கு பிண்டம் வைத்துள்ள தில தர்ப்பண பூமிக்கு மரணம் அடைந்தவர்களின் ஆத்மாக்கள் வந்து பிண்டங்களை மனதார பெற்றுக் கொண்டு தமது சந்ததியினரை ஆசிர்வதிக்கும்போது அதுவரை மரணம் அடைந்துவிட்ட மூதையார்களுக்கு சரிவர தர்ப்பணமோ, ஸ்ரார்தாமோ செய்யாததினால் ஏற்பட்டு இருந்த அனைத்து பாபங்களும் உடனடியாக விலகுவதால் மன அமைதியும், குடும்ப அமைதியும் மரணம் அடைந்து போன ஜீவன்களின் குடும்பங்களுக்கு கிடைக்கிறது. அது மட்டும் அல்ல கங்கை நதி தனது பாதங்களை வருடியபடி ஓடிச் சென்று அந்த பூமியை புனிதமாக்கி விட்டதினால் சிவபூமி ஆகி விட்ட தில தர்ப்பண பூமியில் வருடத்தின் எந்த நாட்களில் வேண்டுமானாலும் எந்த நேரத்தில் வேண்டுமானாலும் வந்து தர்ப்பணம் செய்யலாம், நேரம் காலம் பார்த்து வரத் தேவை இல்லை என்பது இந்த பூமியின் இன்னொரு மகத்துவம் ஆகும். இதன் காரணம் அங்கு சந்திரனும், சூரியனும் தினமும் ஒன்றாக வந்து தம்மை வழிபட்டுச் செல்கிறார்கள் என்பதினால் தில தர்ப்பண பூமியில் உள்ள தமது வழிபாட்டுத் தல பூமி நித்ய அம்மாவாசை நிலவும் பூமியாகும் (குறிப்பு :

சந்திரனும் சூரியனும் ஒன்றாக இணையும்போது உலகமே இருண்டு விடுகிறது. அதை அம்மாவாசை தினம் என்பார்கள். இவர்களை பூமியிலே எதற்காக சாமர்த்தியமாக கிருஷ்ணர் வரவழைத்தார் என்ற கதை மகாபாரதத்தில் உள்ளது). இதை உணர்ந்து கொண்டதினால்தான் பார்வதியும் அங்கு வந்து ஆத்மா தர்ப்பணம் செய்து கொண்டு தன்னை புனிதமாக்கிக் கொண்டாள். பூமியிலே தில தர்ப்பண பூமியில் மட்டுமே இறந்தவர்களது ஆத்மாக்கள் நேரடியாக வந்து பிண்டங்களை பெற்றுக் கொண்டு செல்வதும் இல்லாமல், அங்கு நுழைந்த உடனேயே தூய்மை அடைந்து, பிண்டத்தைப் பெற்றுக் கொண்ட பின்னர் அங்கிருந்து நேரடியாக சிவலோகத்துக்கு சென்று விடும். அவற்றுக்கு யமலோகத்தில் மிச்சம் கழிக்க வேண்டிய தண்டனைக் காலம் இருந்தாலும் அவை தள்ளுபடி ஆகி விடுகின்றது'

வசிஷ்ட முனிவர் மூலம் தில தர்ப்பண பூமியின் இப்படிப்பட்ட பெருமைகளை அறிந்து கொண்ட ராமபிரான் தனது தந்தை தசரதன் மற்றும் தந்தையைப் போன்ற ஜடாயுவுக்கும் தப்பணம் செய்ய வேண்டிய சரியான இடம் அதுவே என்பதை உணர்ந்து கொண்டார். மேலும் தனக்காக ராவணனுடன் சண்டைப் போட்டு உயிரை துறந்த தனது தந்தையைப் போன்ற பறவை ஜடாயுவிற்கு தர்ப்பணம் சரிவர செய்யாததினாலும், ராமேஸ்வரத்தில் ஜடாயுவிற்கு பூரண தர்ப்பணம் செய்ய மறந்து விட்டதினாலும் தமது மனதில் சஞ்சலம் தொடர்கிறது என்பதையும் அதற்குப் பிறகே உணர்ந்து கொண்டார். ஆகவே சற்றும் தாமதிக்காமல் தில தர்ப்பண பூமிக்கு தமது சகோதரர் லஷ்மணருடன் கிளம்பிச் சென்றார். அங்கு சென்று தனது மாதா, பிதா, குரு மற்றும் தெய்வம் என நால்வரையும் வணங்கிய பின் தனது தந்தை தசரதருக்கும் ஜடாயுவிற்கும் தர்ப்பணம் செய்து விட்டு பிண்டமாக சாத உருண்டையை வைத்த போது அந்த நான்கு பிண்டங்களும் சிவ லிங்கங்களாக மாறிவிட்டன. அடுத்தகணம் தசரதரும், ஜடாயுவும் அங்கு தோன்றி தாம் தமக்கு செய்த தர்ப்பணத்தினால் பூரண திருப்தி அடைந்து விட்டதினால் அங்கிருந்து நேராக சொர்கத்தை நோக்கி செல்வதாகக் கூறினார்கள். அதைக் கேட்டு பெரும் மகிழ்ச்சி அடைந்த ராமரும் லஷ்மணரும் அந்த சிவலிங்கங்களுக்கு அங்கேயே பூஜைகளை செய்து

வழிபட்டப் பின்னர் அருகில் இருந்த கூத்தனூரில் மனித கண்களுக்கு தெரியாமல் இருந்து கொண்டிருந்த பிரும்மாவையும் வழிபட்டப் பின் பூரண மன அமைதியுடன் அயோத்திக்கு திரும்பினார்கள்.

வெகு காலத்துக்குப் பின் வாரணாசி நகரை ஆண்டு வந்திருந்த மன்னன் ஒருவன் நாரத முனிவரிடம் தர்ப்பணம் செய்து முன்னோர்களின் ஆத்மாக்களின் பசி மற்றும் தாகத்தைத் தீர்க்கவல்ல வாரணாசியைப் போன்ற மேன்மையான பூமி உலகில் உண்டா என்று கேட்டபோது அவர் கூறினாராம், வாரணாசிக்கு சற்றும் குறைவில்லாத மேன்மையான இடம் தில தர்ப்பண பூமியாகும் என்றும் அதைவிட மேன்மையான இடம் அகண்டத்தில் கிடையாது என்றும் அதன் காரணம் அங்குதான் மறைந்த முன்னோர்களின் ஆத்மாக்கள் யம பயமே இல்லாமல் பிண்டத்தை நேரடியாக வந்து பெற்றுக் கொண்டு பசி மற்றும் தாகத்தை தீர்த்துக் கொள்வதும் இல்லாமல் அங்கிருந்து சிவலோகப் பிராப்தி பெற்று சிவலோகத்துக்கு செல்கின்றன என்றும் அங்குதான் சிவபெருமான் தவத்தில் இருந்துள்ளார், பார்வதி ஆத்ம தர்ப்பணம் செய்து கொண்டாள், ராம-லஷ்மணர்கள் வந்து தசரதனுக்கும் ஜடாயுவிற்கும் தர்ப்பணம் செய்துள்ளார்கள், சிவ பூமியான அங்கு யம கணங்கள் நுழையக் கூட முடியாது என்றும் கூறினார்.

இன்றும் அங்குள்ள முக்தீஸ்வரர்-ஸ்வர்ணவல்லி ஆலயத்தில் பின்புறத்தில் ராம லஷ்மணர்கள் பூஜித்த சிவலிங்கங்கள் உள்ளன. அந்த ஆலயத்தை சற்று தள்ளி ஓடும் அரசலூர் என்ற ஆறே தில தர்ப்பண பூமியில் காலத்தால் பூமிக்குள் மறைந்து விட்டதாக கூறப்படும் கங்கையின் கிளை நதிகளாக ஓடிய ஹரி-சிவா ஆறு என்றும் கூறுகிறார்கள்.

ஆகவே தமது வாழ்நாளில் எவர் ஒருவர் முறையாக தமது மறைந்த முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்து பிண்டம் போடவில்லையோ, அல்லது தர்ப்பணமே செய்யாமல் இருந்துள்ளார்களோ அவர்கள் ஒருமுறை தில தர்ப்பண பூமிக்கு வந்து தர்ப்பணம் செய்து பிண்டம் போட்டால் அதுவரை

அவர்களுக்கு நிலவி வந்திருந்த பாபம் விலகும் என்பது நம்பிக்கை ஆயிற்று. அதன் மூலம் அவர்களது முன்னோர்களின் ஆத்மாக்களும் மன அமைதியோடு சிவலோகம் செல்லும், அவர்களது குடும்பத்திலும் அமைதியும் மகிழ்ச்சியும் நிலவும் என்கிறார்கள்.

சுமார் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தில தர்ப்பணபுரி ஆலயத்தில் உள்ள முக்தீஸ்வரர் ஸ்வயம்புவாக எழுந்தருளியவர். தர்ப்பணம் முடிந்த பின் அவர்கள் அளிக்கும் பிண்டத்தைப் பெற்றுக் கொள்ள நேரில் வரும் முன்னோர்களுடைய ஆத்மாக்களுக்கு முக்தி தருபவர் என்பதினால் இந்த ஈசனை முக்தீஸ்வரர் என்பார்கள். மேலும் இங்குள்ள முக்தீஸ்வரரை சந்திர பகவானும் சூரிய பகவானும் தினமும் நேரிலே வந்து வணங்குவதினால் இந்த பூமி தின அம்மாவாசை பூமியாகவே கருதப்படுகிறதாம். அதனால்தான் நித்திய அம்மாவாசை தினமாக உள்ள இந்த ஆலயத்தில் வருடத்தின் எந்த நாட்களில் வேண்டுமானாலும் எந்த நேரத்தில் வேண்டுமானாலும் வந்து தர்ப்பணம் செய்யலாம் என்கின்றார்கள்.

இந்த ஆலயம் மாயவரம் செல்லும் வழியில் உள்ள கூத்தனூரில் இருந்து சுமார் இரண்டு கிலோமீட்டர் தொலைவில் உள்ளது.
முன்னோர்கள் மட்டும் அல்லாமல் மறைந்து விட்ட ஆனால் தெரிந்த அல்லது தெரியாத எந்த ஒரு நண்பர்களுக்கும் இங்கு வந்து தர்ப்பணம் செய்தால் அவர்களது ஆத்மாக்கள் சாந்தி அடையும் என்பது நிச்சயம்.

https://santhipriya.com/2015/12/தில-தர்பண-பூமி.html

# Swarnavalli Sameda

# Muktheeswarar Temple

# Thilatharpana Bhoomi

## Santhipriya



Once upon a time two rivers namely Hari-Shiva were running few Kilometres away from Koothanoor in Tamilnadu where famous Goddess Saraswathi temple exists. We know the story of Goddess Parvathi who committed suicide by falling into the

Yagna fire when her husband Lord Shiva was insulted by her father Dakshaprajapathi. Even though she was Goddess and committed suicide by falling into sacred fire of Yagna, her lifeless corpse was carried like human by Lord Shiva, but since divine are not subjected to rituals like funeral and tharpan as was done to humans on earth, nothing was done thereafter till her body was cut to pieces on way by Lord Vishnu to appease the anger of Lord Shiva. The parts of the corpse fell in different places in universe. Normally when the divine incarnate end their life, their bodies disappear instantly or get buried deep inside the ground whenever the incarnation comes to an end and they turn into rock idols which get dug out by humans to construct temples of worship there. However as per the divine norms even divine incarnations born as human had to purify their souls for they shed the human body where they stayed till then. The distinction between a God in heaven and a human on earth is the distinction between the mystic pure soul and the sin decayed human body. Therefore unless divine soul that shed the human body purify themselves with certain rituals, they cannot get back the divine form or inherit their true powers again, since their souls had remained attached to the human body for several years. This is the divine rule of Paramatman who created the universe. When Goddess Parvathi committed suicide by jumping into the fire, her soul shed the human body and therefore it became obligatory to get herself purified to absorb back the divine energy exclusive to her that got separated from the body when she jumped into the fire.

Against this background Goddess Parvathi came down to Thila Tharpan Boomi to get her soul purified while Lord Shiva was in penance in the same dense forest on the side of Hari-Siva Rivers to cool down his temper after the occurrence of several

events when he was insulted by his father in law resulting in the death of Parvathi. Lord Shiva too preferred to descend in the site of Thila Tharpan Boomi (It did not get the status of Thila Tharpan Boomi at that time) which was then a dense forest. But both Lord Shiva and Goddess Parvathi were not aware that they both have landed in the same forest. Mother Ganges who flew from the crest of the Lord desired not to disturb the penance of the Lord and therefore she came down from his crest and converted herself into a small tributary river named Hari-Siva to convert the surrounding areas similar to the chill atmosphere that prevailed in Mount Himalayas to give comfort to Lord Shiva. But the two tributary rivers of Ganges disappeared later when Lord Shiva's penance ended and ran underground in Thila Tharpan Boomi in invisible form and therefore it is believed that any one performing Srartha ceremony in Thila Tharpan Boomi would derive the same benefits like the one performed on the banks of river Ganges in Varanasi. There are seven sacred sites where the Srartha ceremony and tharpan when performed will relieve the sins of the souls of those dead ancestors. The seven Maha sacred shethras are Kasi, Rameswaram, Sri Vanjiyam, Thiruvenkadu, Thila tharpan Boomi, Gaya and Allahabad. Tharpan is a Hindu ritual performed with chanting of sacred mantras in which pouring sesame seeds mixed with water form a part of the ritual.

When Goddess Parvathi descended on earth and reached Thila Tharpan Boomi, she was faced with mental agony and anxiety on the main issue of re-joining with Lord Shiva after purifying her soul. She was fully aware that first she has to purify her soul because she had committed suicide by jumping into the fire and her body (corpse) did not vanish or disappear like any other divine manifestations when they were born as humans and ended their life span on earth. After deliberating all

aspects in mind, she finally decided to perform self Tharpan to purify her soul and performed the rituals by own self.

The interesting aspect of srartha and tharpan ceremony connected to this story need to be explained here. The first aspect is that in none of the mythological stories there is mention that divine manifestations have committed suicide and the dead corpse of the manifestations have been carried like the humans on earth except the self-inflicted suicide of Goddess Parvathi. The dead corpse of Goddess Parvathi was carried on the shoulders by Lord Shiva who travelled around universe in anger till Lord Vishnu cut the corpse to pieces to calm down the anger of Lord Shiva. No other incarnations have ever undergone such uniqueness.

Even in Ramayana it is mentioned that Lord Ram directed Goddess Sita to prove her modesty by jumping into the fire. Once she complied his orders she was not burnt in fire but mother earth created a crater on her body and absorbed Sita into her thus ending the incarnation of Sita.

When Lord Krishna was hit by the arrow of a hunter, he fell dead but his human body disappeared instantly. Lord Parasurama, Lord Ram and Lakshman have all disappeared into the sea. Renuka Devi, mother of Lord Parasurama too disappeared when she was traveling with Parasurama. Similarly on earth Adi Sankara who was divine incarnate of Lord Shiva disappeared in Himalayas. Their bodies have never been seen. Thus Goddess Parvathi had been the only known unique exception wherein upon her death, her corpse was carried by the Lord on his shoulders very similar to the decedents of those dead on earth carrying the

dead bodies on their shoulders for funeral rites. Moreover several parts of her corpse reportedly fell in different places on earth to become Sakthi temples. Therefore it became inevitable for Goddess Parvathi to undergo the ritual of tharpan in earth to cleanse her soul departed from the human body which turned into a corpse.

The second aspect is regarding self tharpan performed by Goddess Parvathi. What she performed was not similar tharpan or ritual connected to it as done by humans, but divine tharpan meant only to cleanse her soul to absorb back the divine energies exclusive to Goddess Parvathi. The similarities was only the use of essential ingredients needed for the ritual which is sesame seed and water. Unless the soul is cleansed and purified by performing certain process similar to tharpan performed by humans when sesame seed mixed with water is offered to free the souls from sins, her divine energies floated in cosmic and travelled along with her soul but unattached and can be absorbed back into the soul only by divine tharpan by sitting on a wet sesame seed bed and chant certain mantras exclusive to divine unknown to humans.

Therefore she took bath in river Hari-Siva, sat on a fully wet ground spread thickly with sesame seed and chanted certain mantras exclusive to Goddess Parvathi to direct her divine energy floated in cosmic to enter into her body through the soul as before. Till the divine energy exclusive to her was absorbed back into her, she remained seated on the wet sesame seed spread ground. The wet sesame seeds are believed to have the power to retain or regain the divine energy and consciousness as it is divine seed. Since sesame seed and water were involved in

energizing the soul by penance by the divine soul, it was considered to be a divine tharpan process.

The sacred act of self tharpan as performed by Goddess Parvathi was revealed by Sage Vashishta to Rama and Lakshman before they came to Thila Tharpan Boomi. Why did Lord Ram and Lakshman come to Thila Tharpan Boomi? What was the story?

At the end of Lankan war Lord Ram and Lakshman returned to Ayodhya. On way both of them performed Srartha ritual to Dasaratha at Rameswaram. Prior to war too they had performed tharpan ritual and gave Pinda daan to Dasaratha when they were in exile in the forest when Dasaratha's death news was received. However even after the tharpan they could not derive mental peace and some sort of uneasiness haunted their mind and heart because the Pinda daan offered were not accepted by the crows indicating that the ritual may have remained incomplete. The felt that they were not rid of Brahmathi Dosha and perhaps it continued to haunt them. Therefore when they sought the counsel of sage Vashishta he shared another sacred information as revealed by sage Narada Muni to him. The said secret was revealed by mother Ganga to Narada Muni. What was the sacred information?

'While Lord Shiva was in penance in Thila Tharpan Boomi, Narada Muni once happened to pass by the side of the said forest and was surprised to see mother Ganges flowing there as tributary river and quickly came down to inquire her of the reason. In the midst of their talk, river Ganges told Narada Muni that in Thila

Tharpan Boomi, she noticed large no of people living in and around the area came there throughout the year, even at odd hours and performed tharpan and offered Pinda daan to the departed souls of their ancestors after taking bath in her water (then flown as tributary river in the name of Hari-Siva). The Pinda daan in the form of rice balls offered by them were taken directly by the invisible dead souls and Lord Brahma in invisible form (Antharyathmi) sitting at a distance near present Koothanoor where Goddess Saraswathi temple exists, accounted them in silence without disturbing the penance of Lord Shiva. Mother Ganges was thrilled to notice that in each one of the cases the dead souls of the ancestors in invisible form personally came there and accepted the Pinda rice balls* from her river bank unhindered by Yama Ganas whose presence were nowhere seen there. But she too could not explain to Narada Muni the rationale behind the absence of the Yama ganas under whose custody the dead souls remain. (*The rice balls were not physically taken by the invisible souls but due to the sacredness of the mantras chanted by the pundits several times more quantity of Pinda as offered in earth were given to the dead souls by Yama ganas. This is the rule of Paramatman and even Yama or his Ganas cannot defy the rule. Crow being Lord Yama's carrier vehicle, Yama ganas direct the crows in earth to physically eat the rice balls to indicate to humans that the Pinda has been accepted by the concerned souls in heavenly abodes).

Sage Narada was thrilled to hear the information and unable to resist his temptation to know why Yama or his ganas accompany the souls, he decided to wait in Thila Tharpan Boomi till Lord Shiva opened his eyes to seek the reason for the surprising event happening there. Once Lord Shiva's penance ended he rushed

to him to pay his obeisance and prayers and sought clarity on this mystic issue of the departed souls directly coming and accepting the Pinda daan without hindrance from Yama ganas.

Lord Shiva told him that whichever place he (Lord Shiva) sat in penance, they were out of bounds to Lord Yama or his Bhootha ganas for ever and they were not empowered to even cause slightest disturbance to any souls visiting there. Therefore the tharpan performed in Thila Tharpan Boomi was highest in sacredness as the Ganges flowing from his crest flew through his legs as tributary River to give soothing of chillness during his penance and thus the Ganges further got sanctified by this act. Once his penance ended, Ganges went back into his crest and the tributary rivers of her hid below earth and ran underground thus turning the area into highly sanctified one and unreachable to Lord Yama and his deva ganas. Therefore the Pinda daan given in Thila Tharpan Boomi goes to the departed souls directly and the sins arising out of non-compliance of tharpan gets wiped off. Further this was the only place on earth the tharpan can be performed on any day of the year without referring the almanac since both Lord Chandra and Lord Sun daily visit Thila Tharpan Boomi together to offer their reverence and prayer to Lord Shiva. When both Lord Chandra and Lord Sun stay together the day is called Amavasya day- full dark sky. Due to this reason all through the year it is Amavasya day in Muktheeswar temple in Thila Tharpan Boomi and therefore the tharpan can be performed at any time on any day (Why both of them visited earth together by the cunning act of Lord Krishna is narrated in Mahabharata). On realizing the merit of the sacredness of the place his consort Parvathi too chose to perform self tharpan to get her purified. That was the sole reason why Thila

Tharpan Boomi was the only place on earth where when the departed souls were given Pinda daan after performing tharpan were directly accepted by the departed souls and went to Shiva log directly from there without facing further persecution at the hands of Yama even if some punishment remained to be completed'.

When Lord Ram learnt of the glory of Thila Tharpan Boomi from sage Vashishta, he immediately decided that it would be the proper place to perform tharpan to his father Dasaratha and also to bird Jadayu whom he respected like his father and who died for his cause while attempting to stop Ravan who forcibly carried Sita. Only after sage Vashishta unravelled the sacred story did Lord Ram realise that Bird Jadayu whom Lord Ram considered as his step father could not be accorded proper rituals either on way to Sri Lanka or in Rameswaram after Bird Jadayu died and perhaps that could be the reason for uneasiness haunting him. Now that the proper place to perform tharpan that remained insufficiently performed have been identified, Lord Ram decided to immediately proceed to Thila Tharpan Boomi and perform the rituals once again so that the departed souls rested in peace thereby offering mental peace to them (Ram and Lakshman). Without waiting further, Lord Ram and Lakshman proceeded to Thila Tharpan Boomi to perform the ritual and tharpan for both their father Dasaratha and father like figure Bird Jadayu at the bank of river Hari–Siva which was then flowing near the place where Lord Shiva performed penance. Before commencing tharpan and Srartha ceremony, Lord Ram and Lakshman offered worship to their mother, father, Guru and other deities. Once they placed the Pinda after performing the tharpan, the rice balls instantly turned into Shiva Lings. Next both Dasaratha and Jadayu appeared before them to inform that they were fully satisfied with the ritual and happily proceeding to

Swarga log from there. Realizing the presence of Lord Shiva there Rama and Lakshman performed pooja to those Shiv Lings and worshiped them. From there they proceeded to Koothanoor where Lord Brahma stayed in invisible form, worshiped him too and returned back to Ayodhya.

Many centuries later when one of the Kings who ruled Varanasi sought to know from Sage Narada whether any other place beyond Varanasi exist on earth where the thirst and hunger of the dead souls of ancestors could be satiated by performing tharpan and the departed souls attain Shiva log prapthi (Reaching Shiva Loga directly after taking rice balls called Pinda daan), the sage revealed that in earth one cannot find another sacred place equivalent to Thila Tharpan Boomi to perform tharpan as it was the most sanctified place from where the dead souls of the ancestors directly go to Shiva Loga without fear of Yama after taking Pinda daan there since it was the sacred place where Lord Shiva penanced, Goddess Parvathi performed self tharpan, Lord Ram and Lakshman performed tharpan to their father Dasaratha and father like figure Bird Jadayu and to be blessed to see the Pinda offered by them turn into Shiva Lings thereby indicating that it was Shiva Boomi where Yama or his ganas cannot enter and deter the departed souls from accepting Pinda to satiate their hunger and thirst. The Shiva Lings found consecrated on the backyard of the temple are believed to be the same Shiva Lings worshiped by Lord Ram and Lakshman after performing tharpan on the river banks of River Hari-Siva.

A river called Arasalur flowing from north to Southern side near Thila Tharpan Boomi, is believed to be the very same Hari-Siva tributary river of mother Ganges

flowing in Varanasi. Therefore it is firmly believed that those who could not perform annual tharpan to the departed ancestors in their lifetime for any reason, if they come to Thila Tharpan Boomi and perform Srartha ceremony and other rituals including Pinda daan in memory of those dead in their family, the departed souls will rest in peace for ever and the families of those who perform the tharpan will also be rid of the sins arising out of non-performance of the rituals till then and be blessed with mental peace and happiness.

The 2000 year old Shiva temple is called Muktheeswar temple and Lord Shiva manifest here as Muktheeswar and grace the souls to go to Shiva Log after they visit there and accept the Pinda daan. Since both Lord Chandra and Lord Sun daily visit the temple site to worship Lord Shiva, every day is considered to be Amavasya day in the temple site and therefore any one can visit the temple on any day to perform tharpan without referring to almanac.

The pundit in the temple claimed that not only to ancestors but also if the tharpan is performed here for both known and unknown friends, their souls will also be freed from sins, but will also go to Shiva log and rest in peace. This temple is situated nearly two kilometres away from Koothanoor on way to Mayavaram.

https://santhipriya.com/2015/12/thila-tharpan-boomi-e.html